**6387**

பதிவு எண் / Register Number: SEP2016

# Part - III

# சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

SSLC

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100
Time Allowed : 2½ Hours ] [ Maximum Marks : 100

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and underline and pencil to draw diagrams.

குறிப்பு : இவ்வினாத்தாள் ஏழு பிரிவுகளைக் கொண்டது.
**Note :** This question paper contains **seven** sections.

## பிரிவு - I / SECTION - I

(மதிப்பெண்கள் : **24**) / (Marks : **24**)

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. **14x1=14**
(ii) **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

Note : (i) Answer **all** the questions.
(ii) Choose the **correct** answer.

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து சீனாவிற்காக ஏற்படுத்திய கொள்கை :
(அ) திறந்த வெளிக் கொள்கை (ஆ) வாரிசு இழப்புக் கொள்கை
(இ) பாதுகாக்கப்பட்ட வியாபாரக் கொள்கை (ஈ) நிலம் அழித்தல் கொள்கை
The policy formulated by English and USA for China :
(a) Open Door Policy (b) Doctrine of Lapse
(c) Protective Trade Policy (d) Scorched Earth Policy

2. முசோலினியின் இரகசிய காவல் படை ________ என்று அழைக்கப்பட்டது.

(அ) ஓவ்ரா (ஆ) கெஸ்டபோ (இ) நாசிசம் (ஈ) பாசிசம்

Mussolini's secret police was known as :

(a) OVRA (b) Gestapo (c) Nazist (d) Fascist

3. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரத்தை நடத்தியவர் :

(அ) டி.எஸ். ராஜன் (ஆ) பக்தவச்சலம்

(இ) இராஜகோபாலாச்சாரி (ஈ) வ.உ.சி.

At Vedaranyam, the Salt Law was broken by :

(a) T.S. Rajan (b) Bakthavachalam

(c) Rajagopalachari (d) V.O.C.

4. வைக்கம் அமைந்துள்ள இடம் :

(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா

(இ) ஆந்திரப்பிரதேசம் (ஈ) கர்நாடகம்

Vaikam is a place in :

(a) Tamil Nadu (b) Kerala

(c) Andhra Pradesh (d) Karnataka

5. அணு ஆயுத குறைப்பு தீர்மானத்தை ஐ.நா. பொது சபையில் இந்தியா கொண்டு வந்த ஆண்டு :

(அ) 1965 (ஆ) 1976 (இ) 1995 (ஈ) 1956

India brought a resolution in the UN General Assembly in favour of disarmament in :

(a) 1965 (b) 1976 (c) 1995 (d) 1956

6. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை :

(அ) மக்களாட்சி (ஆ) குடியாட்சி

(இ) உயர் குடியாட்சி (ஈ) சர்வாதிகாரம்

The most popular form of Government in modern days :

(a) Democracy (b) Monarchy

(c) Oligarchy (d) Hierarchy

7. உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுவது :

(அ) மார்ச் 11 (ஆ) மார்ச் 14 (இ) மார்ச் 15 (ஈ) மார்ச் 16

World Consumer Day is celebrated on :

(a) March 11 (b) March 14 (c) March 15 (d) March 16

8. தென்மேற்கு பருவக்காற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைத்தொடர் __________.

(அ) விந்தியா (ஆ) ஆரவல்லி

(இ) சாத்பூரா (ஈ) மைக்காலா

The Mountain Range which lie parallel to the direction of the South West Monsoon Wind is __________.

(a) Vindhya (b) Aravali

(c) Satpura (d) Maikala Range

9. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் மண் __________ ஆகும்.

(அ) வண்டல் மண் (ஆ) கருப்பு மண்

(இ) சரளை மண் (ஈ) பாலை மண்

The soil found in the Arid Zone is known as __________.

(a) Alluvial Soil (b) Black Soil

(c) Laterite Soil (d) Desert Soil

10. சோட்டாநாகபுரி பீடபூமி __________ வளத்திற்கு புகழ் பெற்றது.

(அ) கனிம வளம் (ஆ) இயற்கைத் தாவரம்

(இ) பருத்தி (ஈ) வண்டல் மண்

Chotta Nagpur Plateau is noted for __________.

(a) Mineral Resource (b) Natural Vegetation

(c) Cotton Cultivation (d) Alluvial Soil

11. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து ________ .

(அ) நீர் வழி (ஆ) வான்வழி

(இ) சாலை வழி (ஈ) குழாய் வழி

Cost efficient and most popular mode of transport in our Country is ________.

(a) Waterways (b) Airways

(c) Roadways (d) Railways

12. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது ________ .

(அ) மக்களின் செல்வ நிலையை (ஆ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை

(இ) மக்களின் ஏழ்மை நிலையை (ஈ) மக்களின் கல்வி நிலையை

Per Capita Income is an Indicator of :

(a) Richness of People (b) Living Standard of People

(c) Poverty of People (d) Literacy of People

13. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்

(அ) ஜெயபிரகாஷ் நாராயண் (ஆ) ஜவஹர்லால் நேரு

(இ) டாக்டர். ராஜேந்திர பிரசாத் (ஈ) ஆச்சார்ய வினோபாபாவே

Bhoodan Movement was started by :

(a) Jaya Prakash Narayan (b) Jawaharlal Nehru

(c) Dr. Rajendra Prasad (d) Acharya Vinobhabhave

14. இந்தியாவில் அதிக விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலம் ________ .

(அ) கோவா (ஆ) தமிழ்நாடு

(இ) கேரளா (ஈ) ஆந்திரபிரதேசம்

________ is the state with the highest literacy rate in India.

(a) Goa (b) Tamil Nadu

(c) Kerala (d) Andhra Pradesh

## பகுதி - II / PART - II

குறிப்பு : இரு வினாக்களுக்கும் விடையளிக்க. 2x5=10

Note : Answer **both** the following :

**15.** பொருத்துக.

Match the following :

(i) (அ) உட்ரோ வில்சன் - பான்கிமூன்

(ஆ) மெயின்காம்ப் - இராஜாராம் மோகன்ராய்

(இ) தற்போதைய ஐ.நா. பொதுச் செயலாளர் - டாக்டர். எஸ். தருமாம்பாள்

(ஈ) நவீன இந்தியாவின் விடிவெள்ளி - அமெரிக்கா

(உ) வீரத் தமிழன்னை - கோபிஅனான்

- எனது போராட்டம்

- இங்கிலாந்து

(a) Woodrow Wilson - Mr. Ban Ki Moon

(b) Mein Kampf - Raja Rammohan Roy

(c) Present Secretary General of UNO - Dr. S. Dharmambal

(d) Herald of New Age - America

(e) Veera Tamilannai - Mr. Kofi Annan

- My Struggle

- England

(ii) (அ) லாவா பீடபூமி - பஞ்சாப்

(ஆ) கரிசல் மண் - பிரெஞ்சு மேப்பியலாளர்கள்

(இ) இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் - தக்காணம்

(ஈ) தெற்கு இரயில்வே - ஹைதராபாத்

(உ) காற்றில் மிதக்கும் பலூன் - உத்திரப்பிரதேசம்

- சென்னை

- பருத்தி பயிரிடுதல்

(a) Lava Plateau - Punjab

(b) Black Soil - French map makers

(c) Sugar bowl of India - Deccan

(d) Southern Railways - Hyderabad

(e) Hot air balloon - Uttar Pradesh

- Chennai

- Cotton Cultivation

## பிரிவு - II / SECTION - II

(மதிப்பெண்கள் : 20) / (Marks : 20)

குறிப்பு : (i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறு விடை தருக. 10x2=20

(ii) பகுதி-I -ல் நான்கு வினாக்கள், பகுதி-II -ல் ஒரு வினா, பகுதி-III -ல் நான்கு வினாக்கள் மற்றும் பகுதி-IV -ல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

**Note :** (i) Answer **any ten** of the following questions in brief.

(ii) Choose **four** from **Part-I**, one from **Part-II**, four from **Part-III** and one from **Part-IV**.

### பகுதி - I / PART - I

16. ஏகாதிபத்தியம் வரையறு.

Define Imperialism.

17. முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன ?

Why did America enter into First World War ?

18. சுயராஜ்யக் கட்சி - சிறு குறிப்பு வரைக.

Write a short note on Swarajya Party.

19. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

What are the main objectives of the UNO ?

20. பெரும் புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்களைக் குறிப்பிடுக.

Name the important leaders and centres of the mutiny.

21. 19-ஆம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகளைக் குறிப்பிடுக.

Point out the impacts of Social and Religious Reform Movements in the 19th Century.

22. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி குறிப்பு வரைக.
Write a note on the welfare measures taken by Kamaraj.

23. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார் ?
Why do we call Periyar as "Vaikam Hero" ?

## பகுதி - II / PART - II

24. இந்தியா - ஐ.நா.வின் தீவிர ஆதரவாளர் - இக்கூற்றை நியாயப்படுத்து.
"India has rendered whole hearted support to the UNO" - Justify.

25. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக.
Give Abraham Lincoln's definition of Democracy.

## பகுதி - III / PART - III

26. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை ?
What are the main Physical divisions of India ?

27. இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக.
Name the factors determining the climate of India.

28. வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளின் ஏதேனும் நான்கு அம்சங்களை குறிப்பிடுக.
Name any four main characteristics of the tropical evergreen forest.

29. வேளாண் தொழிலின் வகைகள் யாவை ?
What are the types of agriculture ?

30. ஏதேனும் ஐந்து மென்பொருள் மையங்களை குறிப்பிடுக.
Name any five Software Centres.

31. எல்லையோர சாலைகளின் முக்கியத்துவம் யாது ?
What is the significance of border roads ?

32. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதேனும் நான்கினைக் கூறுக.
Name any four Mass Communications used by the People.

33. பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள் யாவை ?
What are the important aspects of Disaster Risk Reduction ?

## பகுதி - IV / PART - IV

34. நாட்டு வருமானத்தை வரையறு.
Define National Income.

35. பசுமைப் புரட்சி குறித்து சிறு குறிப்பு வரைக.
Write a note on Green Revolution.

## பிரிவு - III / SECTION - III

(மதிப்பெண்கள் : 8) / (Marks : 8)

குறிப்பு : **ஏதேனும் நான்கினை** வேறுபடுத்திக் காட்டுக : 4x2=8

**Note :** Distinguish between **any four** of the following :

36. இமயமலையில் உருவாகும் ஆறுகள் - தீபகற்ப ஆறுகள்.
Himalayan Rivers and Peninsular Rivers.

37. தென்மேற்கு பருவக் காற்று - மற்றும் வட கிழக்குப் பருவக் காற்று.
South West Monsoon and North East Monsoon.

38. காற்று சக்தி மற்றும் அனல் மின் சக்தி.
Wind energy and Thermal energy.

39. காரிஃப் மற்றும் ராபி பயிர்கள்.
Kharif and Rabi crops.

40. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.
Agro based and Mineral based industries.

41. நீர் மாசடைதல் - நிலம் மாசடைதல்.
Water Pollution and Land Pollution.

42. ஏற்றுமதி - இறக்குமதி.
Exports and Imports.

43. நேரிணை வணிகம் - பல்கிணை வணிகம்.
Bilateral Trade and Multilateral Trade.

## பிரிவு - IV / SECTION - IV

(மதிப்பெண்கள் : 8) /(Marks : 8)

குறிப்பு : கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் **இரண்டினைத்** தேர்ந்தெடுத்து அவற்றின் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. 2x4=8

Note : Choose **any two** of the following and answer **all** the questions given under each Caption.

44. சர்வதேச சங்கம் :

(அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக.

(ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது ?

(இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் ?

(ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது ?

League of Nations :

(a) Name the organisations which were found before the League of Nations.

(b) Where was the League of Nations headquarters situated ?

(c) How should the Member Nations solve the problems ?

(d) When did Japan Capture Manchuria ?

45. பாசிசக் கட்சி :

(அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார் ?

(ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக.

(இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன ?

(ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன ?

Fascist Party :

(a) Who was the founder of Fascist Party ?
(b) Give the slogans of Mussolini.
(c) What were the aims of Fascism ?
(d) What was the motto of Fascism ?

46. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி :

(அ) மத்திய இந்தியாவில் புரட்சியை வழி நடத்திச் சென்றவர் யார் ?

(ஆ) இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது ?

(இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன ?

(ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன ?

Revolt at Central India :

(a) Who led the revolt at Central India ?
(b) Name the place captured by Rani Lakshmi Bai.
(c) What was her end ?
(d) What did Tantia Tope do ?

47. மவுண்ட் பேட்டன் திட்டம் :

(அ) 1947-ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றவர் யார் ?

(ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார் ?

(இ) மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன ?

(ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன ?

The Mount Batten Plan :

(a) Who became the Governor General of India in 1947 ?
(b) Who was the last British Governor General ?
(c) What was Mount Batten Plan ?
(d) What was the reaction of the Congress and Muslim League ?

## பிரிவு - V / SECTION - V

(மதிப்பெண்கள் : 20) / (Marks : 20)

குறிப்பு : ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் **ஒன்றினைத்** தேர்வு செய்து **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 4x5=20

**Note :** Answer all the **four** questions by selecting **one** option from each question

### பகுதி - I / PART - I

48. (அ) ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை ?

அல்லது

(ஆ) ஐ.நா.வின் முக்கியமான சாதனைகளை எழுதுக.

அல்லது

(இ) உப்பு சத்தியாகிரகம் பற்றி எழுதுக.

(a) What were the effects of Imperialism ?

OR

(b) What are the major achievements of the UNO ?

OR

(c) Write a note on Salt Satyagraha.

### பகுதி - II / PART - II

49. (அ) சார்க் அமைப்பு பற்றி எழுதுக.

அல்லது

(ஆ) தேர்தல் முறையைப் பற்றி குறிப்பிட்டு, அவற்றைப் பற்றி விளக்கம் தருக.

அல்லது

(இ) நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

(a) Write a short note on SAARC.

OR

(b) Mention the types of election and explain them.

OR

(c) Write a paragraph on the rights of Consumers.

## பகுதி - III / PART - III

50\. (அ) மழைநீர் சேகரிப்பினை விளக்குக.

அல்லது

(ஆ) அமில மழையின் விளைவுகள் யாவை ?

அல்லது

(இ) பேரிடர் அபாய நேர்வு குறைப்பில் ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

(a) Describe rain water harvesting.

OR

(b) What are the effects of acid rain ?

OR

(c) Write the importance of Early Warning System Disaster Risk Reduction.

## பகுதி - IV / PART - IV

51\. (அ) நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்களை விவரி.

அல்லது

(ஆ) பசுமைப் புரட்சியை விளக்குக.

அல்லது

(இ) தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

(a) Explain two basic Concepts of National Income.

OR

(b) Explain Green Revolution.

OR

(c) Explain the various Power Programs in Tamil Nadu.

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதில், அவ்விடங்களைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும் மற்றும் காலக்கோட்டிற்கும் அவ்வாறே குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

**Note :** Blind Candidates may write only notes for the questions related to map and time line chart.

## பிரிவு - VI / SECTION - VI

(மதிப்பெண்கள் : **5**) / (Marks : **5**)

குறிப்பு : கீழ்க்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக.

**Note :** Draw a time line on the following :

52. 1910 முதல் 1930 வரையிலான எவையேனும் ஐந்து வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக. 5

Any five important events between the years 1910 -1930.

## பிரிவு - VII / SECTION - VII

(மதிப்பெண்கள் : **15**) / (Marks : **15**)

குறிப்பு : வரைபட வினாக்கள். 5

**Note :** Map questions.

53. (அ) ஆசிய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும்.

(i) பார்மோசா

(ii) சாகலின் தீவுகள்

(iii) பசுபிக் பெருங்கடல்

(iv) மஞ்சூரியா

(v) காண்டன்

அல்லது

(ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றினை குறிக்கவும்.

(i) காஷ்மீர்

(ii) அமிர்தசரஸ்

(iii) சௌரி சௌரா

(iv) தண்டி

(v) வேதாரண்யம்

(a) Mark the following places in the given outline map of Asia.

(i) Formosa

(ii) Shakalin Islands

(iii) Pacific Ocean

(iv) Manchuria

(v) Canton

**OR**

(b) Mark the following places in the given outline map of India.

(i) Kashmir

(ii) Amritsar

(iii) Chauri Chaura

(iv) Dandi

(v) Vedaranyam

54. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் இடங்கள்/பகுதிகளைக் குறிப்பிடுக. 10

(i) பாமீர் முடிச்சு

(ii) கங்கை ஆறு

(iii) சோட்டா நாகபுரி பீடபூமி

(iv) வட சர்க்கார் கடற்கரை

(v) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை

(vi) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

(vii) பருத்தி விளையும் ஒரு பகுதி

(viii) சென்னை

(ix) தார் பாலைவனம்

(x) மன்னார் வளைகுடா

(xi) சில்கா ஏரி

(xii) சுந்தரவனம்

(xiii) ஜாம்ஷெட்பூர்

(xiv) கொச்சி

(xv) பாக்ஜலசந்தி

Mark **any ten** places/regions on the given outline map of India.

(i) Pamir Knot

(ii) River Ganga

(iii) Chotta Nagpur Plateau

(iv) Northern Circars

(v) Direction of South West Monsoon wind

(vi) Andaman and Nicobar Islands

(vii) One Cotton growing area

(viii) Chennai

(ix) Thar desert

(x) Gulf of Mannar

(xi) Chilika Lake

(xii) Sundarbans

(xiii) Jamshedpur

(xiv) Kochi

(xv) Palk strait

-o0o-